# செயலாற்றுகை அறிக்கை

# 2018

## கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடைவள அபிவிருத்தி பிரிவு


இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு – 03.

தொலைபேசி : 011-2556724
தொலைநகல் : 011-2556486
மின்னஞ்சல் : info@reco.gov.lk
இணையத்தளம் : www.reco.gov.lk

## உள்ளடக்கம் பக்கம்


1. **கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு**

| | | |
|---|---|---|
| 1.1 | தொலைநோக்கு | 1 |
| 2.1 | பணிநோக்கு | 1 |
| 3.1 | பிரிவின் நோக்கங்கள் | 1 |
| 4.1 | பிரிவின் தொழிற்பாடுகள | 2 |
| 5.1 | இப் பிரிவின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப் | 3 |

2. **நிறுவக கட்டமைப்பு** 4

3. **மனிதவள முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 3.1. | ஆளணித் தொகுதி | 5 |
| 3.2. | இடமாற்றம், தாபன பணிகள் | 7 |
| 3.3. | மனிதவள அபிவிருத்தி | 7 |
| 3.4. | கடன் வழங்கல் | 7 |

4. **வாகனங்கள்** 9

5. **சட்டப் பணிகள்** 10

6. **நிதி முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 6.1. | மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம் | 11 |
| 6.2. | கணக்காய்வு விசாரணைகள் | 15 |

7. **உள்ளக கணக்காய்வுப் பிரிவு** 15

8. **செயலாற்றுகை மேம்பாடு** 16

9. **கால்நடை வள அபிவிருத்தி துறை**

| | | |
|---|---|---|
| 9.1 | திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும் | 18 |
| 9.2 | திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும் | 19 |
| 9.3 | விலங்கு இனவிருத்தி பண்ணைகளினைத் தாபித்தல் | 20 |
| 9.4 | இடைக்கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 22 |
| 9.5 | சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினை விருத்தி செய்தல் | 23 |
| 9.6 | பன்றி வளர்ப்பு விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 23 |
| 9.7 | பதல்கமவில் பால் பதனிடும் பொறித் தொகுதியினைத் தாபித்தல் | 24 |
| 9.8 | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | 24 |

| | | |
|---|---|---|
| 9.9 | கறவை மாடுகளின் இறக்குமதி | 25 |
| 9.10 | சிறியளவிலான பாற் பண்ணை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களினை விருத்தி செய்தல் | 26 |

**10. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| 10.1 | கிராமிய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 27 |
| 10.2 | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டம்- 2018 | 32 |
| 10.3 | விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் | 33 |

# கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடைவள அபிவிருத்திப் பிரிவு

## 1.1 தொலைநோக்கு

நிலையான கிராமிய பொருளாதாரத்தின் ஊடாக வளமான நாட்டினை உருவாக்குதல்

## 1.2 பணிநோக்கு

கிராமிய மக்களின் பொருளாதாத்தை மேம்படுத்துவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி, உள்நாட்டு கேள்வியினை நிறைவு செய்யும் வகையில் தரமான கால்நடை உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தையில் காணப்படும் போட்டியினை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக வளமான உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்.

## 1.3 பிரிவின் நோக்கங்கள்

- ❖ கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கான கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நிதியுதவியளித்தல் மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

- ❖ கால்நடைவள அபிவிருத்தித் துறையின் அபிவிருத்திக்கான உயர் உற்பத்தித்திறனுடன் கூடிய விலங்கு இனப்பெருக்கத்தினை உருவாக்குதல் மற்றும் உணவுப்பொருட்களின் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக தொழிநுட்ப வழிகாட்டலையும் உதவியையும் நல்குதல்.

- ❖ ஆரோக்கியமான விலங்கினவீருத்திக்குத் தேவையான தரமான விலங்குணவுகளைப் பிரபல்யப்படுத்தல் மற்றும் விலங்கு நோய்களினைத் தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் தொடர்பில் வினைத்திறன் வாய்ந்த விலங்கு சுகாதார சேவையை உறுதி செய்தல்.

- ❖ கால்நடைவளத்தின் ஊடாக உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்வதற்காக தரமான விலங்கு மரபணுவின் உச்சப் பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் உள்ளுர் விலங்கினங்களை விருத்தி செய்தல்.

- ❖ கால்நடை உற்பத்திகளின் சந்தைப்படுத்தல், தயார்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்பன தொடர்பாக முறைசார் விற்பனை வலையமைப்பை உருவாக்கும் பொருட்டு குறித்த தரப்புக்களை ஊக்குவித்தல்.

- ❖ உள் நாட்டு பாற்பண்ணையாளர்களை வலுப்படுத்துவதன் ஊடாக பால் உற்பத்தி இலக்குகளை அடைவதற்கான பங்களிப்பை வழங்கல்.

- ❖ முழு அதிகாரமுள்ள தேசிய விவசாய சந்தைப்படுத்தல் அதிகார சபையினை தாபிப்பதன் மூலம் பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தலும் களஞ்சியப்படுத்தலும் மற்றும் விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை ஒருங்கிணைப்பு செய்தல்.

- ❖ மொத்த விற்பனையாளர்கள், நுகர்வோர் மற்றும் விவசாய உற்பத்தியாளர்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் விலையை ஏற்றுக் கொள்ளக் கூடிய மட்டத்தில் பேணும் நோக்கில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை தாபித்தல்.

## 1.4 பிரிவின் தொழிற்பாடுகள்

புதிய அமைச்சுக்களின் மறுசீரமைப்பின் பின்னர் இவ் அமைச்சு கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கல், கால்நடைவள அபிவிருத்தி, நீர்பாசன மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சு எனும் வகையில் இயங்குகின்றது. தற்சமயம் கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவாக காணப்படும் இப் பிரிவு 2018 டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை அதற்கு முன்னர் காணப்பட்ட கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் கிராமிய பொருளாதார பிரிவாக செயற்பட்டது. அதற்கும் முன்பு காணப்பட்ட கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைகளும் செயற்பாடுகளும் தொடர்ந்தும் இவ் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள அதே சமயம் இப் பிரிவின் ஊடாக பின்வரும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- ❖ கிராமிய பொருளாதாரம் பற்றிய விடயத்திற்கும் அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்கல், தொடர் நடவடிக்கை, மற்றும் மதிப்பாய்வு.
- ❖ கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ❖ பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்தி கொள்கைகளும் மூலோபாய அபிவிருத்தியும்.
- ❖ கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறு தொழிலாண்மை அபிவிருத்தி செயற்பாடுகளும்.
- ❖ கிராமிய பொருளாதார செயற்பாடுகளுக்காக நிதியுதவி வழங்கல்.
- ❖ கால்நடைத் துறையில் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை அளித்தல்.
- ❖ விலங்கு நலன் பேணலும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளும்.
- ❖ கால்நடை வளம் சார்ந்த உற்பத்திகளின் மேம்பாடு, விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்காக நடவடிக்கை எடுத்தல்.

- ❖ நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடைவள ஆராய்ச்சித் துறையை விரிவுபடுத்தல் மற்றும் அதன் பெறபேறுகள் ஊடாக உற்பத்தித் துறையை தரமானதாகவும் போதியளவினதாகவும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ❖ விலங்கு இனத்தொகையை முன்னேற்றுவதந்காக விஞ்ஞான ரீதியான இனப்பெருக்க முறையை விரிவுபடுத்தலும் நோய்களிலிருந்து விலங்குகளைப் பாதுகாத்தலும்.

இப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் பிரதான 4 துறைகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.


- ❖ கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக வலுப்பெறச் செய்வதற்காக கிராமிய வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- ❖ உயர் தரமான கால்நடை உற்பத்திகளை அதிகரிப்பதன் ஊடாக உள்நாட்டு கேள்வியை நிவர்த்தி செய்தல்.
- ❖ கால்நடை உற்பத்திகளின் சந்தைப்படுத்தல், தயார்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பினை தரமுயர்த்துவதற்காக முறை சார் சந்தை வலையமைப்பை உருவாக்குவதன் ஊடாக சந்தையை ஒழுங்குபடுத்தல்.
- ❖ விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை ஒருங்கிணைப்பு செய்வதன் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் நிலவும் போட்டியை வெற்றிகரமாக எதிர்நோக்கக்கூடிய உள் நாட்டு உற்பத்தியாளர்களை உருவாக்குதல்.

## 1.5 இப் பிரிவின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு

இப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றுவதன் பொருட்டு பிரிவின் கீழ் தொழிற்படும் நிறுவனங்கள் பின்வருமாறு.

1. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்
2. தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை
3. வ/ட மில்கோ (தனியார்) நிறுவனம்
4. வ/ட மகாவலி கால்நடை வியாபார நிறுவனம்
5. வ/ட இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி (தனியார்) நிறுவனம்
6. விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

# 02.நிறுவன கட்டமைப்பு முறை



# 03. மனிதவள முகாமைத்துவம்

## 3.1 ஆளணித் தொகுதி

புதிய அமைச்சு அமைக்கப்பட்ட பின்னர் புதிய ஆளணி ஒன்று இன்னும் அங்கீகரிக்கப்படாத அதேசமயம் இதற்கு முன்னர் காணப்பட்ட கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு இயங்கிய காலகட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆளணியினர் இப் பிரிவின் ஆளணியாக தொடர்ந்துத் செயற்பட்டு வருகிறது.

***கிராமிய பொருளாதர அலுவல்கள் மற்றும் கால்நடைவள அபிவிருத்திப் பிரிவு – அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் தொகுதி***

| *தொ.இ* | *பதவி* | *சேவை* | *வகுப்பு/ தரம்* | *சம்பளத் தொகுதி* | *அங்கீ.ப தவிகளி ன் எண்ணி க்கை* | *2018.12.31 திகதி முதல் ஆளணி* |
|---|---|---|---|---|---|---|
| **1.** | செயலாளர் | | | SL 4 -2016 | 01 | க. அ. செ |
| **2.** | மேலதிக செயலாளர் | இ. நி. சே. | விசேட | SL 3 - 2016 | 02 | 02 |
| **3.** | மேலதிக செயலாளர் | இ.கா.உ.சு.சே. | விசேட | SL 3 - 2016 | 01 | 01 (க.பா) |
| **4.** | பிரதான நிதி உத்தியோகத்தர் | இ. க. சே. | விசேட | SL 3 - 2016 | 01 | 01 (க.பா) |
| **5.** | சிரேஷ்ட உதவி செயலாளர் | இ. நி. சே. | I | SL 1 - 2016 | 02 | 02 |
| **6.** | பிரதான கணக்காளர் | இ. க. சே. | I | SL 1 - 2016 | 01 | 00 |
| **7.** | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ. க. சே. | I | SL 1 - 2016 | 01 | 00 |
| **8.** | பணிப்பாளர் | இ. நி. சே. | I | SL 1 - 2016 | 02 | 02 |
| **9.** | பணிப்பாளர் (திட்டமிடல் ) | இ. தி. சே. | I | SL 1 - 2016 | 01 | 01 |
| **10.** | பணிப்பாளர் | இ.கா.உ.சு.சே | I | SL 1 - 2016 | 03 | - |
| **11.** | பிரதி/உதவி பணிப்பாளர்(திட்டமிடல்) | இ. தி. சே. | II/III | SL 1 - 2016 | 03 | 02 |
| **12.** | பிரதி/உதவி பணிப்பாளர் | இ. நி. சே. | II/III | SL 1 - 2016 | 02 | 01 |
| **13.** | பிரதி/உதவி பணிப்பாளர் | இ.கா.உ.சு.சே | II/III | SL 1 - 2016 | 04 | 03 |
| **14.** | கால்நடை மருத்துவர் | இ.கா.உ.சு.சே | II/III | SL 1 - 2016 | 04 | 04 |
| **15.** | கணக்காளர் | இ. க. சே. | II/III | SL 1 - 2016 | 02 | 01 |
| **16.** | உதவி செயலாளர் | இ. நி. சே. | II/III | SL 1 - 2016 | 02 | 01 |
| **17.** | சிவில் பொறியியலாளர் | இ. பொ. சே. | I /II/III | SL 1 - 2016 | 01 | 00 |
| **18.** | சட்ட ஆலோசகர் | திணைக்கள | - | SL 1 - 2016 | 01# | 01 |
| **19.** | சட்ட அலுவலர் | திணைக்களம் | - | SL 1 - 2016 | 01 | 01 |
| **20** | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிக | - | ரூ.22,250/- பொ.நி சு.06/2006 (i) | 01 | 00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **21** | நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | அதி | MN 7–2016 | 01 | 00 |
| **22** | மொழிபெயர்பாளர் | மோழிபெயர்ப்பாளர் சேவை | I/ II | MN 6–2016 | 02 | 02 |
| **23** | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | I /II/III | MN 4–2016 | 530 | 519 |
| **24** | அபிவிருத்தி உதவியாளர் | உசாவிய சேவை | I /II/III | MN 4–2016 | 05* | 05 |
| **25** | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | உசாவிய சேவை | I /II/III | MN 4–2016 | 01* | 01 |
| **26** | புலனாய்வு உதவியாளர் | உசாவிய சேவை | I /II/III | MN 4–2016 | 01* | 01 |
| **27** | சட்ட உதவியாளர் | உசாவிய சேவை | I /II/III | MN 4–2016 | 01 | 00 |
| **28** | தொழிநுட்ப உத்தியோகத்தர் | இ. தொ. சேவை | I /II/III | MN3– 2016 | 02 | 00 |
| **29** | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | இ.த.தொ.தொ.சே | 3 வகுப்பு I/II/III | MT 1– 2016 | 01 | 01 |
| **30** | புகைப்படப்பிடிப்பாளர் | திணைக்கள | | MT 3– 2016 | 01# | 01 |
| **31** | புகைப்படப்படிப்பாளர் | தற்காலிக | - | MT 1– 2016 | 01 | 00 |
| **32** | வீடியோ படப்பிடிப்பாளர் | தற்காலிக | - | MT 1– 2016 | 01 | 00 |
| **33** | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உசே | I /II/III | MN 2–2016 | 32 | 34 |
| **34** | சாரதி | சுாரதி சேவை | விசேடI /II/III | PL 3– 2016 | 30 | 22 |
| **35** | வீடியோ படப்பிடிப்பு உதவியாளர் | தற்காலிக | - | PL 1– 2016 | 01 | 00 |
| **36** | அலுவலக உதவியாளர் பதவிகள் | அலுவலக உதவியாளர் சேவை | விசேடI /II/III | PL 1– 2016 | 20 | 17 |
| ***மொத்தம்*** | | | | | ***666*** | ***626*** |

- *குறியிடப்பட்டுள்ள பதவிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளாகும். குறியிடப்பட்டுள்ள உசாவிய சேவைக்குரிய பதவிகளை வகித்த அலுவலர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டதால் அவ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது.

  அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் 76 பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது.
- # குறியிடப்பட்டுள்ள பதவி வகிப்பவருக்கு தனிப்பட்டதாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த பதவி வகிப்பவர் வேறு பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டால், ஓய்வு பெற்றால், பதவி விலகினால் அல்லது மரணமடைந்தால் இப் பதவி இரத்தாகும்.

## 3.2 இடமாற்றம், தாபன பணிகள்

| தொ. இலக்கம் | விபரம் | நிறைவு செய்த எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | ஆட்சேர்ப்பு - கௌரவ அமைச்சர்/பி. அமைச்சரின் ஆளணி – தற்காலிக – | 38 |
| | நிரந்தர ஆளணி | 08 |
| 02. | புதவி உயர்வுகள் | 04 |
| 03. | ஓய்வு பெறல் | 08 |
| 04 | இடமாற்றம் - இடமாற்றம் பெற்ற | 34 |
| | - இடமாற்றலாகி வந்தோர் | 06 |

## 3.3 மனிதவள அபிவிருத்தி

அலுவலர்களின் அறிவாற்றல், எண்ணக்கரு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக அமைச்சின் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | பயிற்சிகளுக்காக பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **வெளிநாட்டு பயிற்சிகள்** | 18 | 16 |
| **உள்நாட்டு பயிற்சிகள்** | 37 | 17 |

## 3.4 கடன் வழங்கல்

2018 ஆம் ஆண்டில் அமைச்சின் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையின் பெறுமதி 24,684,217 ரூபா ஆகும்.

| தொ.இ | கடன் வகை | 2018 | | |
|---|---|---|---|---|
| | | கோரிக்கைகளின் எண்ணிக்கை | நிறைவு செய்த எண்ணிக்கை | பெறுமதி |
| 1. | இடர் கடன் | 161 | 161 | ரூ.24,684,217/- |

## 04. வாகனங்கள்

**4.1. 2018** ஆண்டு இறுதியில் இப் பிரிவிற்கு சொந்தமான பயன்படுத்தப்பட்டிருந்த வாகனங்கள்

| | ஜீப் வண்டிகள் | கார் | கப் வண்டி | டிபெண்டர் | வான் | மோட்டார்.சைக்கிள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | CAA – 0024 | KY – 4046 | PD – 2955 | CAH - 1634 | NB - 3395 | XU - 7010 |
| 2. | KW – 9982 | KO – 5114 | PF – 6980 | | 251 - 0747 | BBT – 5614 |
| 3. | KX - 8136 | KQ – 9375 | PE – 0010 | | | TT - 2974 |
| 4. | CAB - 6799 | KX – 8612 | PF – 5883 | | | |
| 5. | KQ - 8444 | KQ – 7500 | PF – 5884 | | | |
| 6. | KT - 8467 | KX – 7664 | PG – 4008 | | | |
| 7. | CAU - 3194 | KX – 7037 | PG – 2659 | | | |
| 8. | KY - 5292 | KQ- 6416 | JY – 2948 | | | |
| 9. | CAF - 4619 | KO – 4865 | PA – 1440 | | | |
| 10. | KX – 8135 | KB – 8264 | PA – 1438 | | | |
| 11. | GF – 9312 | KD – 0743 | PF – 6976 | | | |
| 12. | GF – 9288 | KD – 0737 | PD – 8931 | | | |
| 13. | KO – 0024 | JO – 6958 | 252 – 9655 | | | |
| 14. | 65 – 4043 | KP - 4164 | PG – 1773 | | | |
| 15. | KA - 6702 | | PF - 8209 | | | |
| | 15 | 14 | 15 | 01 | 02 | 03 |

2018 ஆண்டு இறுதியில் பிரிவினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 50 ஆகும். 64-3179 இலக்க வாகனம் அப்புறப்படுத்தப்பட்டடுள்ளது. ஆதலால் அது உள்ளடக்கப்படவில்லை. CAA-0024 இலக்க வாகனம் தொழிலாளர் உறவுகள், தொழில் பயிற்சி மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சினால் பயன்படுத்தப்படும் அதேசமயம், அதன் உரிமை கையளிக்கப்படவில்லை. KO-0024 இலக்க வாகனம் தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் உரிமையும் கையளிக்கப்படவில்லை. ஆதலால் அவ் வாகனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 05. சட்டப் பணிகள்

சட்ட செயற்பாடுகள் பற்றிய விபரங்கள்

*2018 ஆண்டின் செயற்குறிப்பு*

| நீதிமன்றம் | 2018.01.01 வரை மீதியாகவுள்ள வழக்குகள் | 2018 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் | முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் | 2018.12.31 திகதிக்கு மீதியாகவுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| தொழில் நியாயதிக்க சபை- எம்பிலிபிட்டிய | 01 | - | 01 | - |
| நீதவான் நீதிமன்றம்- எம்பிலிபிட்டிய | 01 | - | - | 01 |
| தொழில் நியாயாதிக்க சபை- இரத்தினபுரி | 01 | - | 01 | - |
| நீதவான் நீதிமன்றம்- ஹோமாகம | 01 | 02 | 01 | 02 |
| மாவட்ட நீதிமன்றம்- மாத்தளை | 01 | - | - | 01 |
| மாவட்ட நீதிமன்றம் தம்புள்ளை | 02 | 01 | 02 | 01 |
| மாவட்ட நீதிமன்றம் கொழும்பு | 02 | 01 | 02 | 01 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 01 | - | 01 | - |
| உச்ச நீதிமன்றம் | 03 | 01 | 02 | 02 |
| மாவட்ட நீதிமன்றம் அநுராதபுரம் | 01 | - | 01 | - |
| கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | - | 02 | 01 | 01 |
| நீதவான் நீதிமன்றம் பொல்காவெல | - | 01 | - | 01 |

# 06. நிதி முகாமைத்துவம்

## 6.1 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம்

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு
01- செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
01- அமைச்சரின் அலுவலகம்
மீண்டுவரும் செலவினம்

| உப கருத் திட்டம் | செலவினத் தலைப்பு | நிதியிடல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ |
|---|---|---|---|---|---|---|
| **0** | 1001 | 11 | சம்பளமும் வேதனாதிகளும் | 12,000,000.00 | 8,481,809.00 | 3,518,191.00 |
| **0** | 1002 | 11 | மேலதிக நேர விடுமுறை தின படி | 3,800,000.00 | 2,352,888.00 | 1,447,112.00 |
| **0** | 1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 6,000,000.00 | 3,648,389.00 | 2,351,611.00 |
| **0** | 1101 | 11 | உள்ளூர்-பிரயாணப்படி | 1,150,000.00 | 1,063,115.00 | 86,885.00 |
| **0** | 1102 | 11 | வெளிநாட்டு-பிரயாணப்படி | 2,000,000.00 | 2,000,000.00 | - |
| **0** | 1201 | 11 | காகிதாதிகளும் அலுவலக தேவைப்பாடுகளும் | 1,500,000.00 | 643,159.00 | 856,841.00 |
| **0** | 1202 | 11 | எரிபொருள் | 6,930,000.00 | 5,022,576.00 | 1,907,424.00 |
| **0** | 1203 | 11 | உணவு மற்றும் சீருடை | 100,000.00 | 99,980.00 | 20.00 |
| **0** | 1301 | 11 | வாகனம் | 7,000,000.00 | 6,988,705.00 | 11,295.00 |
| **0** | 1302 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 1,000,000.00 | 135,753.00 | 864,247.00 |
| **0** | 1303 | 11 | கட்டடமும் நிர்மானிப்புகளும் | 500,000.00 | - | 500,000.00 |
| **0** | 1401 | 11 | போக்குவரத்து | 2,000,000.00 | 434,457.00 | 1,565,543.00 |
| **0** | 1402 | 11 | தபால் மற்றும் தொலைதொடர்பு | 2,600,000.00 | 1,464,053.00 | 1,135,947.00 |
| **0** | 1403 | 11 | மின்சாரமும் நீரும் | 2,170,000.00 | 2,140,409.00 | 29,591.00 |
| **0** | 1409 | 11 | பிற | 1,950,000.00 | 1,948,388.00 | 1,612.00 |
| | | | | **50,700,000.00** | **36,423,681.00** | **14,276,319.00** |

மூலதனச் செலவினம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **0** | **2001** | **11** | **கட்டடமும் நிரமாணிப்புகளும்** | **1,500,000.00** | **1,000,000.00** | **500,000.00** |
| **0** | 2002 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 500,000.00 | - | 500,000.00 |
| **0** | 2003 | 11 | வாகனங்கள் | 3,000,000.00 | 1,752,490.00 | 1,247,510.00 |
| **0** | 2102 | 11 | தளபாடமும் அலுவலக உபகரணமும் | 3,500,000.00 | 873,990.00 | 2,626,010.00 |
| **0** | 2103 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 2,000,000.00 | 129,480.00 | 1,870,520.00 |
| | | | | **10,500,000.00** | **3,755,960.00** | **6,744,040.00** |

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு

01- செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

02- நிருவாக மற்றும் தாபன பணிகள்

மீண்டுவரும் செலவினம்

| உப கருத்திட்டம் | செலவினத் தலைப்பு | நிதியிடல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1001 | 11 | சம்பளமும் வேதனாதிகளும் | 106,000,000.00 | 93,889,848.00 | 12,110,152.00 |
| 0 | 1002 | 11 | மேலதிக நேர, விடுமுறை தின படி | 4,100,000.00 | 3,868,181.00 | 231,819.00 |
| 0 | 1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 50,000,000.00 | 41,565,697.00 | 8,434,303.00 |
| 0 | 1101 | 11 | உள்ளூர்-பிரயாணப்படி | 900,000.00 | 773,031.00 | 126,969.00 |
| 0 | 1102 | 11 | வெளிநாட்டு-பிரயாணப்படி | 1,500,000.00 | 1,322,830.00 | 177,170.00 |
| 0 | 1201 | 11 | காகிதாதிகளும் அலுவலக தேவைப்பாடுகளும் | 3,765,000.00 | 3,700,598.00 | 64,402.00 |
| 0 | 1202 | 11 | எரிபொருள் | 4,500,000.00 | 4,498,869.00 | 1,131.00 |
| 0 | 1203 | 11 | உணவு மற்றும் சீருடை | 160,000.00 | 123,500.00 | 36,500.00 |
| 0 | 1301 | 11 | வாகனம் | 7,500,000.00 | 7,490,901.00 | 9,099.00 |
| 0 | 1302 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 550,000.00 | 505,604.00 | 44,396.00 |
| 0 | 1303 | 11 | கட்டடமும் நிர்மானிப்புகளும் | 35,000.00 | 14,125.00 | 20,875.00 |
| 0 | 1401 | 11 | போக்குவரத்து | 2,950,000.00 | 2,911,133.00 | 38,867.00 |
| 0 | 1402 | 11 | தபால் மற்றும் தொலைதொடர்பு | 3,600,000.00 | 3,444,953.00 | 155,047,.00 |
| 0 | 1403 | 11 | மின்சாரமும் நீரும் | 6,000,000.00 | 6,000,000.00 | - |
| 0 | 1404 | 11 | வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரிகளும் | 115,000,000.00 | 15,628,577.00, | 99,371,423.00 |
| 0 | 1409 | 11 | பிற | 3,200,000.00 | 3,199,002.00 | 998.00 |
| 0 | 1506 | 11 | அரச ஊழியர்களுக்கான உடைமைக் கடன் வட்டி | 900,000.00 | 900,000.00 | - |
| 0 | 1703 | 11 | அரசமொழிக் கொள்கையை அமுல்படுத்தல் | 200,000.00 | 46,800.00 | 153,200.00 |
| | | | | **310,860,000.00** | **189,883,649.00** | **120,976,351.00** |

மூலதன செலவினம்

| உப கருத்திட்டம் | செலவினத் தலைப்பு | நிதியிடல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 11 | கட்டடமும் நிரமாணிப்புகளும் | 2,000,000.00 | 2,000,000.00 | - |
| | 2002 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 1,000,000.00 | - | 1,000,000.00 |
| | 2003 | 11 | வாகனங்கள் | 2,000,000.00 | - | 2,000,000.00 |
| | 2102 | 11 | தளபாடமும் அலுவலக உபகரணமும் | 2,000,000.00 | 1,314,276.00 | 685,724.00 |
| | 2103 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 2,000,000.00 | 952,520.00 | 1,047,480.00 |
| | 2401 | 11 | ஆளணி பயிற்சி | 4,000,000.00 | 1,963,028.00 | 2,036,972.00 |
| | | | | **13,000,000.00** | **6,229,824.00** | **6,770,176.00** |

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு
02- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
03- அபிவிருத்தி கருத்திட்டம்
மூலதன செலவினம்

| உப கருத் திட்ட ம் | செலவி னத் தலைப்பு | நிதியி டல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2506 | 11 | பொருளாதார மத்திய நிலையங்களை அமைத்தல் | 28,170,000.00 | 27,538,181.00 | 631,819.00 |
| 3 | 2506 | 11 | பாரம்பரிய கைவினைத்தொழில் கிராம அபிவிருத்தி | 25,000,000.00 | 24,241,782.00 | 758,218.00 |
| 4 | 2506 | 11 | மட்பாண்டக் கைத்தொழில் கிராமங்களின் அபிவிருத்தி | 5,000,000.00 | 4,567,448.00 | 432,552.00 |
| 8 | 2506 | 11 | கித்துல் அபிவிருத்தி கருத்திட்டம் | 16,350,000.00 | 12,926,732.00 | 3,423,268.00 |
| 9 | 2506 | 11 | கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 670,520,000.00 | 621,591,506.00 | 48,928,494.00 |
| 10 | 2506 | 11 | விசேட பொ.ம.நி அமைத்தல்-வவுனியா, மட்டக்களப்பு | 128,068,200.00 | 127,855,491.00 | 212,709.00 |
| 11 | 2506 | 11 | இரு குளிர்சாலைகளை அமைத்தல் | 2,871,800.00 | 1,252,441.00 | 1,619,359.00 |
| | | | | **875,980,000.00** | **819,973,581.00** | **56,006,419.00** |

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு
02- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
05- கால்நடைவள அபிவிருத்தி
மீண்டுவரும் செலவினம்

| உப கருத் திட்ட ம் | செலவி னத் தலைப்பு | நிதியி டல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1001 | 11 | சம்பளமும் வேதனாதிகளும் | 120,739,510.00 | 112,190,983.00 | 8,548,527.00 |
| 0 | 1002 | 11 | மேலதிக நேர விடுமுறை தின படி | 2,050,000.00 | 1,996,194.00 | 53,806.00 |
| 0 | 1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 48,260,490.00 | 48,260,488.00 | 2.00 |
| 0 | 1101 | 11 | உள்ளூர்-பிரயாணப்படி | 1,450,000.00 | 1,408,236.00 | 41,764.00 |
| 0 | 1102 | 11 | வெளிநாட்டு-பிரயாணப்படி | 1,500,000.00 | 1,359,270.00 | 140,730.00 |
| 0 | 1201 | 11 | காகிதாதிகளும் அலுவலக தேவைப்பாடுகளும் | 800,000.00 | 470,203.00 | 329,797.00 |
| 0 | 1202 | 11 | எரிபொருள் | 2,680,000.00 | 2,420,198.00 | 259,802.00 |
| 0 | 1203 | 11 | உணவு மற்றும் சீருடை | 50,000.00 | 50,000.00 | - |
| 0 | 1301 | 11 | வாகனம் | 3,400,000.00 | 3,341,404.00 | 58,596.00 |
| 0 | 1302 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 500,000.00 | 279,979.00 | 220,021.00 |
| 0 | 1303 | 11 | கட்டடமும் நிர்மானிப்புகளும் | 220,000.00 | - | 220,000.00 |
| 0 | 1401 | 11 | போக்குவரத்து | 1,000,000.00 | 997,331.00 | 2,669.00 |
| 0 | 1402 | 11 | தபால் மற்றும் தொலைதொடர்பு | 1,000,000.00 | 1,000,000.00 | - |
| 0 | 1403 | 11 | மின்சாரமும் நீரும் | 1,000,000.00 | 1,000,000.00 | - |
| 0 | 1409 | 11 | பிற | 1,000,000.00 | 762,979.00 | 237,021.00 |
| 0 | 1506 | 11 | அரச ஊழியர்களுக்கான உடைமை கடன் வட்டி | 700,000.00 | 374,858.00 | 325,142.00 |
| | | | | **186,350,000.00** | **175,912,123.00** | **10,437,877.00** |

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு
02- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
01- கால்நடை வள அபிவிருத்தி
மீண்டுவரும் செலவினம்

| உப கருத் திட்ட ம் | செலவி னத் தலைப்பு | நிதியி டல் | உருப்படி விபரம் | தேறிய ஒதுக்கீடு | 2018.12.31 வரை செலவினம் ரூ. | மீதி ரூ |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 11 | கட்டடமும் நிரமாணிப்புகளும் | 13,000,000.00 | 9,869,642.00 | 3,130,358.00 |
| | 2002 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 500,000.00 | - | 500,000.00 |
| | 2003 | 11 | வாகனங்கள் | 1,500,000.00 | - | 1,500,000.00 |
| | 2102 | 11 | தளபாடமும் அலுவலக உபகரணமும் | 2,500,000.00 | 160,127.00 | 2,339,873.00 |
| | 2103 | 11 | பொறியும் பொறித்தொகுதியும் | 1,000,000.00 | - | 1,000,000.00 |
| | 2401 | 11 | ஆளணி பயிற்சி | 2,000,000.00 | 238,612.00 | 1,761,388.00 |
| **3** | 2506 | 11 | பால் பயன்பாட்டை அதிகரித்தல் | 46,310,000.00 | 25,575,333.00 | 20,734,667.00 |
| **4** | 2507 | 11 | விலங்கு இனவிருத்திப் பண்ணையை அமைத்தல் | 40,060,000.00 | 15,459,528.00 | 24,600,472.00 |
| **14** | 2506 | 11 | மத்திய கால்நடைவள அபிவிருத்தி வேலைத்திட்டம் | 50,940,000.00 | 25,596,126.00 | 25,343,874.00 |
| **19** | 2506 | 11 | சிறய கோழிபண்ணை அபிவிருத்தி | 15,790,000.00 | 11,491,349.00 | 4,298,651.00 |
| **23** | 2506 | 11 | பன்றி வளர்ப்புத் தொழில் அபிவிருத்தி | 10,650,000.00 | 7,895,648.00 | 2,754,352.00 |
| **29** | 2507 | 12 | புடல்கம பாற்தொழிற்சாலை அமைத்தல் இலங்கை/டென்மார்க் | 2,000,000,000.00 | 1,414,599,082.00 | 585,400,918.00 |
| | | 17 | | 375,000,000.00 | 374,334,497.00 | 665,503.00 |
| **31** | 2509 | 11 | தேசிய உணவு உற்பத்தி வேைலைத்திட்டம் | 107,800,000.00 | 78,720,552.00 | 29,079,448.00 |
| **32** | 2507 | 11 | இலங்கை எருமை மாடு மரபணுவை விருத்தி செய்வது ஊடாக எருமைபால் உற்பத்தியை அதிகரித்தல் | 470,000.00 | 467,500.00 | 2,500.00 |
| **33** | 2506 | 17 | 20,000 பாற்பசுக்கள் இறக்குமதி செய்தல் | 160,000,000.00 | 19,379,300.00 | 140,620,700.00 |
| **34** | 2506 | 12 | சிறிய பாற்பண்ணை கூட்டுறவு சங்கங்களை அமைத்தல் | 900,000,000.00 | 1,219.00 | 899,998,871.00 |
| | | 17 | | 121,000,000.00 | 8,200.00 | 120,991,800.00 |
| | | | | **3,848,520,000.00** | **1,983,796,625.00** | **1,864,723,375.00** |

தலைப்பு : 154- கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு

**<u>2018.12.31 திகதியில் மீண்டுவரும் மூலதனச் செலவு</u>**

| செலவின வகை | தேறிய ஒதுக்கீடு ரூ. | 2018.12.31 வரை செலவு ரூ. | மீதி ரூ. |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | 547,910,000.00 | 402,219,456.00 | 145,690,543.00 |
| **மூலதனச் செலவினம்** | 4,748,000,000.00 | 2,813,755,990.00 | 1,934,244,010.00 |
| **மொத்தம்** | **5,295,910,000.00** | **3,215,975,446.00** | **2,079,934,553.00** |

## 6.5 கணக்காய்வு விசாரணைகள் பற்றிய விபரம்

| விபரம் | கிடைத்த எண்ணிக்கை | விடையளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| **கணக்காய்வாளர் அதிபதி கணக்காய்வு விசாரணைகள்** | 24 | 24 |
| **உள்ளக கணக்காய்வு விசாரணைகள்** | 04 | 04 |

# 07. <u>உள்ளக கணக்காய்வுப் பிரிவு</u>

**<u>முன்னேற்றம்</u>**

2018 ஆண்டிற்காக இப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் கணக்காய்விற்காக கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ள அதேசமயம், அதன் கீழ் உள்ள விடயங்கள் மற்றும் அதற்குப் புறம்பாக உள்ள விடயங்களின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளும் கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| விடயம் | எண்ணிக்கை |
|---|---|
| 2018 ஆண்டில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வுக்குழு கூட்டம் | 04 |
| அமைச்சின் அனைத்துப் பிரிவுகளிலும் வருடாந்த முன்னேற்றத்தை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலாண்டு அறிக்கை | 04 |
| பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட விசாரனை அறிக்கை | 05 |
| பிரிவின் நிதி, மனிதவளம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு கோரிக்கைகள் | 11 |
| பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட கள ரீதியான கணக்காய்வு | 07 |

# 08. செயலாற்றுகை மேம்பாடு

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல், கால்நடைவள உற்பத்திகளை அதிகரிப்பதன் ஊடாக உள்நாட்டு கேள்வியை நிவர்த்தி செய்தல், கால்நடை உற்பத்திகளுக்காக சந்தை வலையமைப்பை ஏற்படுத்தல், விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், உற்பத்தியையும் சந்தைப்படுத்தலையும் ஒருங்கிணைப்பு செய்வதன் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையின் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு இப் பிரிவின் செயற்பாடுகள் நடைபெறும் அதேசமயம் இத்துறைகளின் மேம்பாட்டிற்காக பிரிவின் ஊடாக வழங்கக்கூடிய பங்களிப்பை இவ் ஆண்டில் தொடர்ச்சியாக வழங்கி இப் பிரிவின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பிற்கான பங்களிப்பாக மட்டுமன்றி, வாழ்வாதார மார்க்கமாகவும், கால்நடைத்துறை உள்நாட்டு பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. தற்சமயம் ஏறத்தாழ ஒரு மில்லியன் குடும்பம் இத்துறையில் ஈடுபட்டுள்ளதுடன், இதில் அதிகமானோர் கிராமிய மக்கள் ஆவர். மிகவும் சுகாதாரப் பாதுகாப்பு முறையிலும் தரமானதாகவும் விலங்கு உற்பத்திகளை சந்தைக்கு வழங்கல், அதிகரிக்கும் உள்நாட்டு கேள்வியை நிவர்த்தி செய்தல் மற்றும் அதன்மூலம் கால்நடை உற்பத்திகளின் இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நிய செலாவணியைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இப் பிரிவின் ஊடாக கால்நடை துறை சார்ந்த பல்வேறு வேலைத்திட்டங்களும் கருத்திட்டங்களும் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று நாட்டில் விலங்கு நோய்கள் பரவுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், கால்நடைத்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தொழிநுட்ப உதவியை வழங்கல் மற்றும் விலங்கு இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல் தொடர்பான சேவைகளும் விலங்கு பரிபாலனம் பற்றிய பயிற்சி வழங்கல், அத்துறையை முன்னேற்றுவதற்கான கருத்திட்டங்களைத் தயாரித்தல், பொருளாதார மதிப்பீடு மற்றும் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளடங்குவதுடன் கால்நடைத்துறையின் அபிவிருத்திக்காக வசதிகளை வழங்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றன.

விலங்கு பரிபாலனத்தை வினைத்திறன் மிக்க தொழிலாக கொண்டு நடாத்துவதற்குத் தேவையான அறிவினை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுள், ஒவ்வொரு காலநிலை வலயங்களுக்கும் பொருத்தமானவாறு பண்ணைகளில் கலப்பற்றதும் கலப்பினமும் உடைய விலங்கு இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மண் வளமற்றுப் போவதைத் தடுக்கவும் மண்வளத்தை விருத்தி செய்யவும் சூழலுக்கு உவப்பான நிலப் பயன்பாட்டு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கிராமிய மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நிதி உதவி வழங்கல் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறு தொழிலாண்மை அபிவிருத்தி ஆகியவற்றை நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வணிக ரீதியாக செல்வாக்குப் பெறும் கித்துள் உற்பத்தி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன ஊடாக கிராமிய மக்களின் சுயதொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், கிததுள் தொழிலாளர்களினதும் அதனை அண்டிய தொழில் முயற்சியாளர்களினதும் பொருளாதாரத்தை வலுப்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்காக தரமான கித்துள் உற்பத்திகளை அறிமுகப்படுத்தல், கித்துள் சார்ந்த உற்பத்திகளை வகைப்படுத்துவதற்காக கித்துள் கைத்தொழில் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் சட்ட ரீதியான பிரச்சினைகளையும் குறைப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே பாரம்பரிய நெசவுக் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மட்பாண்ட உற்பத்தி கிராமங்களின் அபிவிருத்தியின் ஊடாக நெசவுக் கைத்தொழில் ஈடுபட்டுள்ளோரது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காகவும் இக் கைத்தொழில் உற்பத்திகளுக்காக சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கு தேவையான கருத்திட்டங்களும் இவ் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன.

விவசாய விற்பனை அபிவிருத்தி மூலோபாயமாக கிராமிய பகுதிகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்துகைப் பணிகள் அப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும் அதே சமயம், தற்போது இயங்கிவரும் பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை 15 ஆகும். வவுனியா மற்றும் மட்டக்களப்பு மத்திய நிலையங்கள் திறந்துவைக்கப்பட உள்ளன. விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மூன்று பிரதான வகையினதாக உள்ளதுடன் அவை விவசாய உற்பத்திப் பிரதேசங்களை கேந்திரமாகக் கொண்ட மொத்த விற்பனை நிலையங்கள், விவசாய உற்பத்தி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாக/ சில்லறையாக விநியோகிக்கும் மத்திய நிலையங்கள், நகர்ப்புறங்களை கேந்திரமாகக் கொண்ட சில்லறை விற்பனை நிலையங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆண்டில் பொருளாதார மத்திய நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கமைய பிரதான 4 துறைகளின் கீழ் இயங்கும் இப் பிரிவின் தொழிற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் சிறந்த நிதி முகாமைத்துவத்துடன் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

# 09.கால்நடை வள அபிவிருத்தி துறை

கால்நடைத் துறையானது உணவுப் பாதுகாப்புக்கான பங்களிப்பினை மட்டும் வழங்காது வாழ்வாதார விருத்திக்கும் பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. தற்போது நாட்டில் ஏறக்குறைய ஒரு மில்லியன் குடும்பத்தினர் பாற்பண்ணை, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு போன்ற கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துகின்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சின் கால்நடை அபிவிருத்திப் பிரிவானது ஆரோக்கியமானதும் தரமானதுமான விலங்கு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதனூடாக சந்தையில் அதிகரித்துச் செல்லும் கேள்வியினை நிறைவு செய்யும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றினை திட்டமிட்டு நடாத்தி வருகின்றது. மீளாய்வு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட கால்நடை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

### 9.1 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மி.) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் * (ரூ.மி) | விசேட குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் பிரபல்யப்படுத்துதலும் | 46.31 | 80 | 37.78 | 11.47 மி.ரூ இன்னும் மீள்நிரப்பு செய்ய வேண்டிஉள்ளது. |
| 2. | விலங்கு இனவிருத்திப் பண்ணைகளைத் தாபித்தல் | 40.06 | 80 | 31.67 | 15.26 மி.ரூ இன்னும் மீள்நிரப்பு செய்யவேண்டி உள்ளது. |
| 3. | நடுத்தர கால கால்நடை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 50.94 | 60 | 32.56 | 7.36 மி.ரூ இன்னும் மீள்நிரப்பு செய்யவேண்டி உள்ளது. |
| 4. | சிறிய மற்றும் நடுத்தரளவலான கோழிப் பண்ணை விருத்தி | 15.79 | 77 | 12.74 | 0.9576 மி.ரூ இன்னும் மீள் நிரப்பு செய்ய வேண்டி உள்ளது. |
| 5. | இலங்கையில் பன்றி உற்பத்தித் துறையினை மேம்படுத்துதல் | 10.65 | 99 | 7.80 | 0.01 மி.ரூ இன்னும் மீள்நிரப்பு செய்ய வேண்டி உள்ளது. |
| 6. | பதல்கமவில் பால் பதனிடும் பொறுமுறையினைத் தாபித்தல் (இலங்கை அரசாங்கம் / டென்மார்க்) | 2,375.00 | 85 | 1,632.92 | - |
| 7. | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | 107.80 | 100 | 102.51 | 24.57 மி.ரூ இன்னும் மீள் நிரப்பு செய்ய வேண்டி உள்ளது. |
| 8. | 20,000 கறவை மாடுகளின் இறக்குமதி (இலங்கை அரசாங்கம் / அவுஸ்திரேலியா) | 160.00 | 20 | 8.19 | - |
| 9. | சிறியளவிலான பால் பதனிடும் நிலையங்களினைத் தாபித்தல் (இலங்கை அரசாங்கம் / பிரான்ஸ்) | 1,028.00 | 10 | 0.01 | - |
| **மொத்தம்** | | **3,834.55** | | **1,866.18** | |

* நிதிசார் முன்னேற்றமானது கையிலுள்ள விலைப்பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 9.2 திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்

### 9.2.1.பாலின் தரத்தினை அதிகரிப்பதற்காக கால்நடைக் கொட்டகைகளினை மேம்படுத்தும் கருத்திட்டம்

கறவை மாடுகளின் முலைக்கம்புகளில் ஏற்படும் தொற்று நோயானது இலங்கையின் அதிகளவு பால் உற்பத்தி செய்யும் பகுதிகளில் பாலின் தரத்தில் மிகவும் பாதகமான சூழ்நிலையினைத் தோற்றுவிக்கின்றன. முறையாக நிருமாணிக்கப்பட்ட மாட்டுக் கொட்டில்களில் இவற்றினை உரிய வகையில் பராமரிப்பதனூடாக இந் நோய் பரவுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. மாட்டுக் கொட்டில்களின் தரைப்பகுதியினை முறையாக நிருமாணிப்பது மிகவும் முக்கியமாகும்.

அதற்கிணங்க, மாட்டுக் கொட்டில்களின் தரைப்பகுதியினை மேம்படுத்துவதற்காக இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ், மாட்டுக் கொட்டில்களின் தரைப்குதிக்கு கொங்றீட்டு இடுவதற்கு அரசாங்கத்தின் 50% பங்களிப்புடன் பண்ணையொன்றிற்கு ஆகக்கூடுதலாக ரூபா.30,000 நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இதன் கீழ், மாவட்ட மட்டத்தில் 330 பாற் பண்ணைகளினை விருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டிற்கான 337 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 310 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 9.2.2. வறுமையினை ஒழிக்கும் நோக்குடன் பெண்கள் குடும்பத் தலைவிகளாக இருக்கும் குடும்பங்களுக்கு கறவை மாடுகளினை வழங்கும் கருத்திட்டம்

கால்நடைத்துறையில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பாலானோர் சிறிய பாற் பண்ணைகளினை வைத்திருப்பதுடன் இத்தகைய குடும்பத் தலைவிகளினால் பாரியளவு பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ், ரூபா.60,000 பெறுமதியினைக் கொண்ட உயர் வினைத்திறன் கொண்ட கறவை மாடுகள் பெண்களைத் தலைவிகளாக கொண்ட பாற் பண்ணைகளுக்கு அரசாங்கத்தின் 50% பங்களிப்புடன் வழங்கப்படும். இக்கருத்திட்டமானது அவர்களின் வறுமையினை ஒழிப்பதன் மூலம் அத்தகைய பாற்பண்ணைப் பெண்களுக்கு வலுவூட்டலினையும் வழங்கும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 170 பயனாளிகளுக்கு மாகாண விலங்கு இனவிருத்தி மற்றும் சுகாதார திணைக்கங்களினூடாக அமுல்படுத்தப்படும். மீளாய்வு காலப்பகுதியில், 181 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2018 இன் இறுதியில் 166 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 9.2.3. பால் உற்பத்தியினை அதிகரிப்பதனூடாக திரவப் பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துதல்

இக்கருத்திட்டத்தின் கீழ், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் முதியோருக்கும் அவ்வாறே பாடசாலை மாணவர்களுக்குமிடையில் திரவப் பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூபா.12 மில்லியன் செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் மீளாய்வு காலப்பகுதியில் 1,289 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட பால் உற்பத்தி செய்யப்படும் மூன்று வலயங்களினை இலக்காகக் கொண்டு ஆரோக்கியமான பசும் பால் உற்பத்திக்கென பால் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 9.3. விலங்கு இனவிருத்தி பண்ணைகளினைத் தாபித்தல்

### 9.3.1. இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபித்தல்

இந்த இனவிருத்தி பண்ணையானது உள்ளூர் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான உயர் கறவை மாடுகளின் கிடைப்பனவானது தட்டுபாடாக உள்ளமையினைக் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் நாடு பூராகவும் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் ரூபா 10.5 மில்லியன் செலவில் 105 விலங்கு இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 104 பண்ணைகளினைத் தாபிக்கும் நடவடிக்கையானது பூர்த்தியடைந்துள்ளன. இனவிருத்திக்குப் பொருத்தமான விலங்குகளின் கொள்வனவு மற்றும் மாடுகளுக்கான கொட்டகைகளின் நிருமாணம் என்பனற்றிற்காக ரூபா.10.4மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

***2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழிற்பட்ட இனவிருத்திப் பண்ணைகளின் எண்ணிக்கை***

| *இனவிருத்திப் பண்ணை* | *இனவிருத்திப் பண்ணை* | |
|---|---|---|
| | *இலக்கு* | *அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை* |
| *மத்திய* | 20 | 20 |
| *கிழக்கு* | 06 | 04 |
| *வடக்கு* | 15 | 15 |
| *வட மத்திய* | 12 | 12 |
| *வட மேல்* | 20 | 21 |
| *சப்பிரகமுவ* | 06 | 03 |
| *தெற்கு* | 10 | 10 |
| *ஊவா* | 10 | 10 |
| *மேல்* | 06 | 09 |
| *மொத்தம்* | **105** | **104** |
| | | |





*சொrதொழிற்பட்டுவரும் இனவிருத்திப் பண்ணையொன்றின் காட்சி*

### 9.3.2. மேய்ச்சல் நிலங்களின் மேம்பாட்டிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் உபகரணங்களை வழங்குதல்

போசாக்கு நிறைந்த விலங்கினங்களை அதிகரிப்பதனூடாக பால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கும் விலங்குகளின் இனவிருத்தித் திறன்களை விரிவாக்கம் செய்வதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ், தேவையான புண்ணாக்கினை உற்பத்தி செய்வதற்கும் மேய்ச்சல் புல் நிலங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புண்ணாக்கு உற்பத்திக்குத் தேவையான உயர்ந்த உள்ளடக்கங்களுடன் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் 11 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்படும் 99 பயனாளிகளுக்கான ரூபா 50,000 பயனளிப்பு பங்களிப்பின் கீழ் ஒவ்வெருவருக்கும் ஆகக்கூடுதலாக ரூபா.100,000 வரையில் அரசாங்க பங்களிப்பு வழங்கப்படும். 104 பண்ணைகளுக்கான நிருமாண நடவடிக்கைகள் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளன. இதற்கான முதலீடு ரூபா.4.11 மில்லியனாகும்.

### 9.3.3 செம்மறியாடுகள் மற்றும் பசுக்களுக்கான உயிரணுக்களை இறக்குமதி செய்தல்

இலங்கையில் செம்மறியாட்டு கைத்தொழிலினை மேம்படுத்துவதற்காக தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு செம்மறியாடுகளினை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அத்தகைய இறக்குமதி நடவடிக்கையானது நிறைவு பெற்றுள்ளது. இதற்காக தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு ரூபா.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.3.4 மத்திய மாகாணத்தில் மாதிரி இனவிருத்திப் பண்ணையினைத் தாபித்தல்

இக்கருத்திட்டத்தின் கீழ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மிருக வைத்திய வி\ஞ்ஞான பீடத்தின் பயிற்சிப் பண்ணை வளாகத்தில் 50 நவீன வசதிகளுடன் கூடிய மாட்டுப் பண்ணையொன்றினை நிருமாணிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தின் பாற் பண்ணையாளர்களுக்கிடையே பசுக்கள் மற்றும் கன்றுகளினை விநியோகிக்கும்

நோக்குடன் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா.5.0 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.3.5. விலங்கு இனவிருத்தி தொடர்பான பயிற்சி செயலமர்வு

விலங்கு இனவிருத்தி, பண்ணை முகாமைத்துவம் மற்றும் விலங்குகளின் போசாக்குத்தன்மை தொடர்பில் 05 நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று) நடாத்தப்பட்டது. பேராதனையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நிறுவகத்தில் நடாத்தப்பட்ட இந்த பயிற்சி செயலமர்வில் பங்குபற்றாளர்களாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் 40 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.பங்களாதேசிலிருந்து இரண்டு வளவாளர்களின் பங்களிப்பும் இந்த நோக்கத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கும் மேலாக, மத்திய மாகாண அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 02 நடாத்தப்பட்டுள்ளது.

### 9.3.6. ஊவா மாகாணத்தில் விசேட இனவிருத்திப் பண்ணையினைத் தாபித்தல்

ஊவா மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 பண்ணைகளில் விசேட இனவிருத்திப் பண்ணைகளினைத் தாபிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது. இது தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட கன்றுகளுக்கு வழங்கப்படுவதற்காக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்திட்டத்தின் கீழ், அரசாங்கமானது பயனாளி ஒருவருக்கு ஆகக்கூடுதலாக ரூபா.200,000 வரையில் பங்களிப்பினை வழங்கி வருகின்றதுடன் பயனாளி ஒருவர் 50% பங்களிப்பினை வழங்கி வருவதுடன் மீளாய்வு காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய 04 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## 9.4 இடைக்கால கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வட மாகாணத்தில் கால்நடைத் துறையினை விருத்தி செய்வதற்கான பாரிய தேவை எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, மிருக வைத்திய அலுவலகங்கள் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகள் என்பவற்றினை நிருமாணிப்பதனூடாக இத்துறையில் சேவைகள் வழங்கலினை விரிவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

| *உத்தியோகபூர்வ தங்குவிடுதிகள்* | *பௌதீக முன்னேற்றம் (%)* |
|---|---|
| *மன்னார் மாவட்டம் மடுவில் மிருக வைத்திய அலுவலகத்திற்கான உத்தியோகபூர்வ விடுதிகள்* | *100* |
| *முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பில் மிருக வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகள்* | *100* |
| *முல்லைத்தீவு மாவட்டத்தில் துண்க்காய் பண்ணையில் மிருக வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகள்* | *100* |
| *கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சியில் மிருக வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதி* | *80* |
| *வவுனியா மாவட்டத்தில் ஈரற்பெரியகுளத்தில் மிருக வைத்திய அலுவலருக்கான உத்தியோகபூர்வ விடுதி* | *95* |
| *மன்னார் மாவட்டத்தில் மன்னார் மிருக வைத்திய அலுவலருக்கான உத்தியோகபூர் விடுதி* | *15* |
| *யாழ் மாவட்டத்தில் திருநெல்வேலியில் ப.நோ.கூ.ச.கட்டிட நிருமாணம்* | *10* |

## 9.5 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகளினை விருத்தி செய்தல்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது கோழிப் பண்ணை உற்பத்தி நடவடிக்கைளில் தன்னிறைவினைக் காணுதல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையினை இலக்குப்படுத்துதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்றது.இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்,புதிய தொழில்முயற்சியாளர்கள் கவரப்பட்டுள்ளதுடன் தற்போதிருக்கும் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுமுள்ளார்கள். கோழிக்குஞ்சுகள், முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி அவ்வாறே விலங்கு உணவு உற்பத்தி என்பனவற்றினை பரவலாக்கம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரும் வாரமொன்றிற்கு ஆகக் குறைந்தது 03 முட்டைகளையும் வருடமொன்றிற்கு 10 கி.கி. இறைச்சியினையும் நுகரும் வகையில் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் 1,750 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப்பண்ணைகளினைத் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், 1,835 சிறியளவிலான பண்ணைகள் தாபிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்டத்தில் 252 பயனாளிகளுக்கும் மத்திய மாகாணத்தில் நாவுல மிருக வைத்திய அலுவலரின் பிரிவில் 18 பயனாளிகளுக்கு சிறியளவிலான கோழிப்பண்ணைகளினை தாபிக்கும் பொருட்டு ஒவ்வொருவருக்கும் 10 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்குவதற்காக ரூபா.1.02 மில்லியனை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

08 சிறியளவிலான விலங்கு உற்பத்தி தாவரங்களை மற்றும் 18 இறைச்சி பதனிடும் நிலையங்களினைத் தாபிப்பதற்காக ரூபா.3.792 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.அத்தகைய விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் முட்டை மற்றும் இறைச்சி போசாக்கு தொடர்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறிவூட்டுவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

## 9.6 பன்றி வளர்ப்பு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பன்றி வளர்ப்பின் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய கால்நடை அபிவிருத்திச சபைக்குச் சொந்தமான ஹொரக்கலை பண்ணைக்கு அதிகூடிய வினைத்திறன் கொண்ட பன்றி உயிரணுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன.இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா.3.0 மில்லியனாகும். மேலும், நாடு பூராகவும் 61 சிறியளவிலான பன்றித் தொழுவங்களை சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் மேம்படுத்துவதற்காக ரூபா.3.004 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வட மேல் மாகாணத்திலுள்ள வன்னிகம, கூட்டு பண்ணை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள மாதிரி பன்றிப் பண்ணையில் சிறியளவலான பன்றிக் கொல் களம் ஒன்றினை நிருமாணிப்பதற்கு ரூபா.1.002 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.7. பதல்கமவில் பால் பதனிடும் பொறித் தொகுதியினைத் தாபித்தல்

மில்கோ கம்பனிக்குச் சொந்தமான கொழும்பு நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள பால் தொழிற்சாலையினை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பதல்கம சிரிங்கபாத பண்ணைக்கு மாற்றியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது டென்மார்க் அரசாங்கத்தின் நிதி உதவுகையுடன் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் முதல் கட்டமாக தொழிற்சாலை நிருமாணத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமானது 2016.05.18 ஆம் திகதியன்று இடம்பெற்றது. மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் பின்வருமாறு.

| *செயற்பாடு* | *பௌதீக முன்னேற்றம் (%)* | *முதலீடு* |
|---|---|---|
| *பால் தொழிற்சாலைக்கான கட்டிட நிருமாணம்* | *99* | *ஈரோ 56.81 மில்லியன்* |
| *நிருவாக மற்றும் அலுவலக கட்டிடம்* | *88* | |
| *ஊழியர்களுக்கான சிற்றுண்டிச்சாலைக்கான கட்டிடம்* | *85* | |
| *ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியொகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகின்ன நிருமாணம்* | *88* | |
| *மின்பிறப்பாக்கி அலகினைத் தாபித்தல்* | *100* | |
| *இயந்திர மற்றும் மின்சார துணைப் பொருட்களை நிறுவுதல்* | *47* | |
| *இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் நிருமாணப் பொருட்களைக் கொண்டதாக 43 கொள்கலன்கள் இறக்குமதி* | | *56.81 மில்லியன் யுரோ* |
| *.இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கு உள்நாட்டு நிதியிலிருந்து வரி செலுத்துதல்* | | *ரூபா.375 மில்லியன்* |

## 9.8. தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### 9.8.1. சிறியளவிலான பாற் பண்ணைகளினை வலுவுட்டுதல்

இக்கருத்திட்டமானது தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி ஏற்பாடுகளினைப் பயன்படுத்தி சிறியளவிலான பாற் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தினை ஊக்குவிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிதி உதவு தொகையின் 50% ஒவ்வொரு பயனாளிக்கும் கிடைக்கும் வகையில் ஆகக்குகூடுதலாக ரூபா.60,000/- வழங்கப்படும்.மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்களம் மற்றும் மில்கோ தனியார் கம்பனி என்பவற்றினூடாக அமுல்படுத்தப்படும் இந்த பிரதான கருத்திட்டத்தின் கீழ், மீளாய்வு காலப்பகுதியில் மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினூடாக 781 கருத்திட்டங்களையும் மில்கோ தனியார் கம்பனிக்கு 180 கருத்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 9.8.2.சிறியளவிலான ஆடு வளர்ப்பு விருத்திக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது சிறியளவிலான ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் மற்றும் உள்நாட்டு ஆட்டுப் பால் உற்பத்தி மற்றும் ஆட்டிறைச்சி உற்பத்தி என்பவற்றினை அதிகரித்தல் எனும் நோக்கங்களுடன் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. 332 பண்ணைகளினைத் தாபிப்பதற்கான கருத்திட்ட முதலீடு ரூபா. 18.5 மில்லியனாகும். ஒரு கடா ஆட்டினையும் 04 அல்லது 05 மறி ஆடுகளினையும் கொள்வனவு செய்வதற்கு ரூபா.60,000 வழங்கப்பட்டுள்ளது.

### 9.8.3.சிறியவிலான கோழிப்பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வீட்டு மட்டத்தில் கோழிப்பண்ணைகளினை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதன் மூலம் பொது மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதே சிறிய கோழிப்பண்ணை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். பயனாளி ஒருவருக்கு ஒரு மாத, வயதினையுடைய 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கப்படுவதுடன் கோழிக் கூடுகளை அமைத்தல் அவற்றுக்கான தீனி வழங்கல் போன்றவை பயனாளிகள் மேற்கொள்ளல் வேண்டும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நாடு பூராகவும் 8,064சிறிய மற்றும் நடுத்தரளவிலான கோழிப் பண்ணைகள் தாபிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூபா.29.28 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.9. கறவை மாடுகளின் இறக்குமதி

உள்நாட்டு திரவப் பால் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உயர் வீரியம் கொண்ட 20,000 கருத்தரித்த பசுக்களினை இறக்குமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய பசுக்கள் வினைத்திறன் வாய்ந்த தரமான உள்நாட்டுப் பால் உற்பத்தியினை மேற்கொள்வதற்கு நாடு முழுவதிலும் பாற் பண்ணைகளினைத் தாபிக்கும் நோக்குடன் பாற் பண்ணைத் தொழிலில் ஈடுபடுகின்ற நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2,000 கறவை மாடுகள் நியுசிலாந்திலிருந்தும் 3,000 கறவை மாடுகள் அவுஸ்திரேலியாவிலிருந்தும் 2017 இல் இறக்குமதி செய்யப்பட்டதுடன் அவை 68 முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன. அவை 2018.12.31 ஆம் திகதி வரையில் 4,814 கன்றுக்குட்டிகளினை ஈன்றுள்ளதுடன் இதன் மூலம், உள்நாட்டு பால் உற்பத்திக்கு17,852,605லீற்றர் பாலினை மேலதிகமாக வழங்கியுள்ளது. இரண்டாம் கட்டமாக, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கர்ப்பிணிப் பசுக்களினை வளர்ப்பதற்கு விரும்புகின்ற தொழில்முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுள்ளதுடன் பொருத்தமான தொழில்முயற்சியாளர்களினை தெரிவு செய்யும் செயல்முறையானது இடம்பெற்று வருகின்றது. உரிய சுகாதார நியமங்களைப் பெற்றுக் கொள்வதில்

தாமதம் ஏற்பட்டுள்ளமையால் அதனைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இறக்குமதி செயற்பாடுகளினை விரைவில் ஆரம்பிக்க முடியும்.

### 9.10. சிறியளவிலான பாற் பண்ணை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களினை விருத்தி செய்தல்

இலங்கையில் பாற் பண்ணை உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்குடன் இக்கருத்திட்டத்தின் பூர்வாங்க நோக்கமான குறிப்பிட்ட பிரதேசங்களில் பால் உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதி சேர்ப்பதனூடாக சமூகத்தின் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் செயற்பாடானது அமுல்படுத்தப்படுகின்றது. இதன் கீழ், 06 தெரிவு செய்யப்பட்ட சிறிய பால் உற்பத்தி நிலையங்களினை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்காக 13.9 மில்லியன் யூரோ செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் நிதி இணக்க உடன்படிக்கையானது இலங்கை அரசாங்கத்திற்கும் பிரெஞ்சுக் குடியரசுக்குமிடையில் 2017.12.27 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்டது.

கருத்திட்ட வழங்கலுடன் தொடர்புடைய ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் நிதிசார் உடன்படிக்கையானது 2018.09.28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் முறை தொடர்பில் அரசாங்க வங்கிகளுக்கிடையில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

# 10. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் முன்னேற்றம்

அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவானது, கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்காக அமுல்படுத்திய கிராமிய வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் பின்வருமாறு.

## 10.1. கிராமிய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

### 10.1.1. கித்துல் விருத்திக் கருத்திட்டம்

மீளாய்வு காலப்பகுதியில், கித்துல் விற்பனை நிலையங்களினை மாவட்ட மட்டத்தில் தாபித்தல், கித்துல் தேன் மற்றும் கருப்பட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் என்பவற்றினைப் பிரபல்யப்படுத்துதல் பொன்ற விடயங்களினை முன்னெடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

அரசாங்கமானது கித்துல் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்கு பின்வரும் வழி முறைகளில் தலையீடு செய்து வருகின்றது.

- ❖ கித்துல் உற்பத்தியாளர்களின் விற்பனைத்தேவைகளுக்காக விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக நிதி வழங்கல்.
- ❖ பாதுகாக்கப்பட்ட வனங்களில் கித்துல் சீவல் பற்றி கித்துல் தொழிலாளர்களுக்கு அறிவுட்டல்
- ❖ பிரதேச செயலகங்கள் ஊடாக புதிய மதுவரிச்சட்டம் பற்றி கித்துல் தொழிலாளர்களுக்கு அறிவுட்டல்
- ❖ கித்துள் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்திக்காக தேவையான நிதி உதவி வழங்கல்
- ❖ கித்துள் தொழிலாளர்களுக்காக பயிற்சி திட்டங்களை நடாத்தல், பொருட்களையும் உபகரணங்களையும் வழங்கல்.

2018 இல் கித்துல் கைத்தொழில் விருத்திக்காக உள்ளூர் நிதி மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 15 மில்லியன் தொகையுடைய நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. 13 மாவட்டங்கள் மற்றும் 52 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட கித்துல் கைத்தொழில் விருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் 2,200 பயனாளிகளுக்கு அளிக்கப்பட்ட நன்மைகள் என்பனவற்றின் விபரங்கள் பின்வருமாறு;

*கித்துல் கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம் - 2018(பிரதேச செயலக பிரிவுகளின்படி)*

| *மாவட்டம்* | *பயன்கள் வழங்கப்பட்ட பிரதேச செயலக பிரிவு* | *மொத்த ஏற்பாடுகள் (ரூ.)* |
|---|---|---|
| காலி | யக்கலமுல்ல, வெலிவிட்டிய, திவிதுர, போபே பொத்தல், நெலுவ, தவலம், நியாகம | 1,740,154.64 |
| மாத்தறை | பிட்டபெத்தர, பஸ்கொட, அக்குரஸ்ஸ, மாலிம்பொட, கொட்டப்பொல | 1,444,175.26 |
| களுத்துறை | வலல்லாவித்த, அகலவத்தை, இங்கிரிய, புளத்சிங்கள, பாலிந்ததுவர | 1,585,530.93 |
| மாத்தளை | உக்குவெல, மாத்தளை, ரத்தோட்டை | 770,567.01 |
| பதுளை | எல்ல, சொரணாதோட்டை, ஊவா பரணகம | 997,363.19 |
| கண்டி | பூஜாபிட்டிய, தும்பனே, மெததும்பர, உடுதும்பர, தெல்தோட்டை, உட பலாத | 1,213,005.15 |
| இரத்தினபுரி | நிவித்திகல, இம்புல்பே, பலாங்கொடை, கிரியெல்ல, எஹலியகொட, அயகம | 1,564,097.94 |
| நுவரெலியா | கொத்மலே, அம்பகமுவ, ஹங்குரங்கேத்த | 398,041.24 |
| கேகாலை | தெஹியோவிட்ட, புளத்கொஹுபிட்டிய, தெரணியகல, வரக்காப்பொல, அரநாயக்க. | 1,337,010.31 |
| ஹம்பாந்தோட்டை | கட்டுவான | 1,013,720.62 |
| மொனராகலை | மெதகம, மதுல்ல, மொனராகலை | 617,474.23 |
| கம்பஹா | தொம்பே | 17,350.52 |
| அம்பாறை | அம்பாறை | 199,020.62 |
| மொத்தம் | 52 | 12,897,511.53 |

### 10.1.2. பாரம்பரிய கைப்பணிப் பொருட்களின் கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

2018 இல் உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து இக்கருத்திட்டத்திற்கு ரூபா.25 மில்லியன் நிதி ஏற்பாடுகள் கிடைக்கக்கூடிதாக இருந்தது. புத்தாக்க உற்பத்திகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களினை வழங்குதல், புத்தாக்க உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளினை வலுப்படுத்துதல், நவீன உபகரணங்களினை அறிமுகப்படுத்துதல், மரபு சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் கைப்பணித் திறன்களை விருத்தி செய்வதில் புதிய தொழில்நுட்ப பெறுமதிகளினைச் சேர்த்தல், கைப்பணிப் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபடுகின்றவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளினை விரிவாக்குதல் என்பன இந்த கருத்திட்ட நடவடிக்கைகளில் உள்ளடங்கியுள்ளன.

நாடு பூராகவும் தெரிவு செய்யப்பட்ட 22 மாவட்டங்களில் 93 பிரதேச செயலகப் பிரிவுகளில் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களினை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, பாரம்பரிய கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கப்படும் கிராமங்களினை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்ப அறிவு, மூலப் பொருட்கள், மூலப்பொருட்களை பயிர் செய்வதற்கான உதவி, உபகரணங்கள் என்பவற்றினை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் உரிய மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.இக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்பட்ட கைத்தொழில்கள் பின்வருமாறு;

| பாரம்பரிய கைப்பணி அபிவிருத்தியின் அடையாளங் காணப்பட்ட துறைகள் | | | |
|---|---|---|---|
| **ஆபரண உற்பத்தி** | பற்றிக் உற்பத்தி | நிலவிரிப்பு தயாரிப்பு | பனை வளம் சார்ந்த உற்பத்திகள். |
| **சணல், நார் தொடர்பான உற்பத்திகளின் விருத்தி** | கையினாலான விசேட "பீரளு" உற்பத்தி | மூங்கில் சார்ந்த ஆக்கங்கள் | உருக்கு உற்பத்தி |
| **பொற்கொல் பட்டறை** | சீலுக்குப் பயன்படுத்தப்படும் மெழுகு உற்பத்தி | மூங்கில் கைத்தொழில்கள் | மரத்தினாலான உற்பத்திகள் |
| **கலைஞர்கள், சிற்பிகளினை ஊக்குவித்தல்** | தும்பு சார்ந்த பொருட்களின் உற்பத்தி | தேங்காய் சிரட்டைகளினால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள் | சிற்பக் கலையினை விருத்தி செய்தல் |
| **பிரம்பிலனாலான உற்பத்திகள்** | செம்பு உற்பத்தி | | |

**மரபு ரீதியான கைப்பணி கிராமங்களின் அபிவிருத்தி –**

**(பிரதேச செயலக பிரிவுகளுக்கமைவாக)**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்களின் எண். | பயனாளிகளின் எண். | மொத்த ஏற்பாடுகள் (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் ரூ.. | பௌதீக சார் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| **கண்டி** | யட்டுநுவர, பஸ்பாகே கொரள, அக்குரண, பத்தும்பர | 5 | 45 | 1,086,956.00 | 1,000,870.00 | 100 |
| **கேகாலை** | தெஹியோவிட்ட, வரகாபொல, ரம்புக்கன, கலிகமுவ. | 4 | 78 | 880,795.82 | 850,600.30 | 100 |
| **பொலநறுவை** | திம்புலாகல | 1 | 4 | 102,061.86 | 100,200.00 | 100 |
| **இரத்தினபுரி** | கலவான, பெல்மதுளை, குருவிட்ட, எஹெலியகொட, கொடகவெல | 5 | 86 | 1,039,429.90 | 1,031,800.00 | 100 |
| **புத்தளம்** | மாதம்மை, மஹாவெவ,முந்தல், நாத்தாண்டியா | 5 | 77 | 745,051.55 | 728,200.00 | 100 |
| **அநுராதபுரம்** | பளுகஸ்வெவ, பலகல, மிஹிந்தலை, கலென்பின்துனுவெவ, தலாவ. | 5 | 50 | 1,367,628.30 | 1,350,200.10 | 100 |
| **களுத்துறை** | களுத்துறை, புளத்சிங்கள, மதுரவல, ஹொரண, அகலவத்தை. | 6 | 66 | 1,515,100.93 | 1,500,652.00 | 100 |
| **ஹம்பாந்தோட்டை** | சூரியவெவ, தங்காலை, பெலயத்தை, கட்டுவான, அங்குனகொலபெலஸ்ஸ | 7 | 154 | 1,581,958.76 | 1,581,000.40 | 100 |
| **மாத்தறை** | திஹகொட, கம்புருப்பிட்டிய, பஸ்கொட, முலத்தியன, ஹக்மன, பிட்டபெத்தர, கடவத்சத்தர, அதுரலிய, மாத்தறை, வெலிப்பிட்டிய, கிரிந்த, புஹுல்வெல,டிக்வல, தெவிநுவர. | 26 | 95 | 3,733,419.85 | 3,595,512.10 | 100 |
| **காலி** | போபெ, பொத்தல, கடவத் சதர கரந்தெனிய, அம்பலாங்கொடை, ஹிக்கடுவை, இமதுவ, பெந்தோட்டை, பத்தேகம, அக்மீமன, வெலிவிட்டிய, திவிதுர, கொனபீனுவெல. | 20 | 140 | 2,439,278.35 | 2,369,190.45 | 100 |
| **மாத்தளை** | அம்பன்கங்க கொரளை, மாத்தளை, உக்குவெல, தம்புள்ள, யட்டவத்தை. | 18 | 89 | 1,219,639.18 | 1,200,789.45 | 100 |
| **பதுளை** | பஸ்சறை, பண்டாரவளை | 2 | 30 | 387,833.45 | 361,425.41 | 99 |
| **மொனராகலை** | மொனராகலை | 1 | 15 | 102,061.86 | 99,821.40 | 99 |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்களின் எண். | பயனாளிகளின் எண். | மொத்த ஏற்பாடுகள் (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் ரூ.. | பௌதீக சார் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| குருநாகல் | உடுபத்தாவ, அளவ்வ, குருநாகல், குளியாப்பிட்டி மேற்கு, கனேவத்தை, கோபிகனே, பொல்கஹவெல, நரம்மல, மல்லவபிட்டிய, கொட்டவெஹர, மாவத்தகம, பமுனகொட்டுவ, பண்டுவஸ்நுவர கிழக்கு | 30 | 270 | 2,845,484.54 | 2,838,020.10 | 100 |
| நுவரெலியா | ஹங்குரங்கெத்த | 2 | 20 | 607,877.94 | 597,248.00 | 99 |
| கம்பஹா | அத்தனகல, மினுவான்கொட, மீரிகம | 5 | 74 | ,617,681.13 | 1,600,581.20 | 100 |
| அம்பாறை | கல்முனை, அம்பாறை, காரைதீவு, நிந்தவூர் | 4 | 52 | 20,086.60 | 910,000.60 | 100 |
| வவுனியா | வெங்கலசெட்டிக்குளம் | 1 | 10 | 117,371.13 | 100,950.00 | 100 |
| கிளிநொச்சி | பூநகரி, பச்சிலைப்பள்ளி | 2 | 35 | 377,628.87 | 370,574.00 | 100 |
| மட்டக்களப்பு | ஏறாவூர் நகரம், போரதீவுப்பற்று, வெள்ளா வெளி, மண்முனை வடக்கு, காத்தான்குடி, பொத்துவில்பற்று | 7 | 135 | 1,367,628.87 | 1,364,741.12 | 100 |
| யாழ்ப்பாணம் | நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பளை | 3 | 75 | 520,515.46 | 510,900.00 | 100 |
| திருகோணமலை | தம்பலகாமம் | 1 | 30 | 173,505.15 | 169,505.10 | 100 |
| மொத்தம் | | | | **24,748,995.5** | **24,232,781.73** | |

### 10.1.3. மட்பாண்டங்களினை உற்பத்தி செய்யும் கிராமங்களினை அபிவிருத்தி செய்தல்

இந்தக் கருத்திட்டமானது கிராமிய மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுகின்ற குடும்பங்களை ஊக்குவித்தல், குயவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுதல், சந்தை நோக்கிலான உற்பத்திகளினை அறிமுகப்படுத்துவதனூடாக சந்தைப்படுத்தல் வசதிகளினை விரிவாக்குதல் மற்றும் குறைந்த வருமானத்தினை ஈட்டுகின்ற குயவர்களுக்கு உபகரணங்களை வழங்குதல் என்பவற்றினை வலியுறுத்துகின்றது.

மீளாய்வு காலப்பகுதியில் இக்கருத்திட்டத்திற்கு ரூபா.5.0 மில்லியன் தொகையுடைய நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கேகாலை, நுவரெலியா, மாத்தளை, மொனராகலை, புத்தளம், குருணாகல், அம்பாந்தோட்டை மற்றும் கம்பகா ஆகிய மாவட்டங்களில் பிரதேச செயலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய மட்பாண்ட கிராமங்களினை விருத்தி செய்வதற்கான முதலீடுகள் மேறகொள்ளப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

- ❖ பாரம்பரிய மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுகின்ற குயவர்களுக்குப் பயிற்சியினை வழங்குதல்
- ❖ மட்பாண்ட கைத்தொழிலில் நவீன தொழில்நுட்ப பிரயோகங்கள் தொடர்பில் பயிற்சியினை நடாத்துதல்.
- ❖ களிமண் அரைக்கும் இயந்திரங்களை வழங்குதல்

❖ மின்சார சக்கப்போருவினை வழங்குதல்

❖ எரிவாயு பாத்திரங்களின் தயாரிப்புக்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்களை மற்றும் அச்சுக்களை வழங்குதல்

❖ குயவர்கள் தமது உற்பத்திப் பொருட்களினை சந்தைப்படுத்துவதற்காக விற்பனை நிலையங்களினைத் தாபித்தல்.

❖ சந்தைப்படுத்தல் கண்காட்சிகள் மூலமாக குயவர்களை ஊக்குவித்தல்

2018 இல் பாரம்பரிய மட்பாண்டங்களினை உற்பத்தி செய்யும் கிராம அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக உள்நாட்டு நிதி மூலங்களின் மூலம் ரூபா.5.0 மில்லியன் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. 08 மாவட்டங்களிலுள்ள 17 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 282 பயனாளிகளினை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்வருமாறு.

***மட்பாண்ட உற்பத்தி கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்***
***(பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில்)***

| தொ. இல. | மாவட்டம் | பி.செ.பிரிவு | கருத்திட்ட அமுலாக்கல் கிராமம் / கிராமங்கள் | பயனாளிகளின் எண். | மொத்த நிதி ஏற்பாட்டின் அளவு(ரூ) | நிதிசார் முன்னேற்றம் (ரூ). | பௌதீக சார் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கேகாலை | அரநாயக்க | சாமகம, தெலக | 30 | 418,453.61 | 410,000.00 | 100 |
| 2 | நுவரெலியா | ஹங்குரன்கேத்த | புராணகம | 7 | 150,030.93 | 149,985.00 | 100 |
| 3 | மாத்தளை | ரத்தோட்டை | E 371 B உடவேரகம | 2 | 81,649.48 | 80,920.61 | 100 |
| 4 | மொனராகலை | மெதகம | திமிபிரியய | 10 | 211,268.04 | 210,200.00 | 100 |
| 5 | புத்தளம் | கருவலகஸ்வெவ | சுதுவெல்ல | 6 | 129,618.56 | 126,218.20 | 100 |
| | | ஆனமடுவ | குமாரகம | 25 | 316,391.75 | 310,000.00 | 100 |
| 6 | குருநாகல் | வீரம்புகெதர | சியம்பலவெஹர | 7 | 150,030.93 | 147,000.00 | 100 |
| | | குளியாப்பிட்டிய( மேற்கு) | தீகல்ல உனலீயா, வஹுமுவ | 18 | 418,453.61 | 409,900.20 | 100 |
| | | பமுனக்கொட்டுவ | பஸல்லவெவ | 25 | 418,453.61 | 399,315.00 | 100 |
| | | உடுபட்டாவ | சியம்பலகஸ்ரூப | 30 | 418,453.61 | 408,08200 | 100 |
| | | இப்பாகமுவ | 498 கஹுட்டவெல, 488 நிந்தபெல்ல | 11 | 418,453.61 | 408,689.00 | 100 |
| | | நிக்கவரட்டிய | இஹல பத்கொலவெவ | 21 | 418,453.61 | 409,900.36 | 100 |
| | | கிர்பாவ | வராவெவ, இஹலவெவ | 20 | 255,154.64 | 245,745.00 | 100 |
| 7 | ஹம்பாந்தோட்டை | வீரகட்டிய | கெப்பிட்டியாவ வடக்கு | 20 | 211,268.04 | 207,900.00 | 100 |
| | | வலஸ்முல்ல | பிபுலகொட | 30 | 211,268.04 | 210,000.00 | 100 |
| 8 | கம்பஹா | தொம்பே | மல்வான, களுகொந்தயவ கிழக்கு, களுகொந்தயவ மேற்கு | 10 | 316,391.75 | 281,00.00 | 100 |
| | | மஹர | வரஹன்துட்டுவ | 10 | 406,206.19 | 399,110.00 | 100 |
| மொத்தம் | | | | 282 | 4,950,000.00 | 4,533,965.37 | |

## 10.2 கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டம் - 2018

நகர மற்றும் புற நகரைச் சார்ந்த குறைந்த வருமானம் பெறும் மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிப்பதற்காகவும் அவ்வாறே கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காகவும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். ரூபா.400 மில்லியன் தொகையுடைய நிதி ஏற்பாடானது அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கிராமிய அணுகு வீதிகள், அணைக்கட்டுக்கள், சிறிய பாலங்கள், கழிவுநீர் முறைமை, பொதுவான குடிநீர் வழங்கல், குடிநீர் பெறும் கிணறுகளை புத்தாக்கம் செய்தல் / திருத்தியமைத்தல், பல நோக்கு கட்டிடங்கள் மற்றும் ஏனைய பொது நலத் தேவைகளினை நிருமாணித்தலும் நவீனமயப்படுத்துதலும் கிராமிய உள்ளக கட்டமைப்பு விருத்தி அலகின் கீழ் சமூக பங்குபற்றல் அணுகு முறையினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதாரத்தினை விருத்தி செய்தல் மற்றும் கிராமிய சமுகத்திற்கான ஆதரவினை வழங்குதல் மற்றும் அறிவு, உபகரணம், தொழில்நுட்பம் என்பவற்றினை வழங்குதல் மற்றும் கிராமிய தொழில் முயற்சியுடமையினை விருத்தி செய்வதற்குத் தேவையான வசதிகள் என்பன கிராமிய அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுவதில் முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளாக விளங்குகின்றன. இதன்மூலம், வருமானத்தினை ஈட்டுவதற்காக பெற்றுக் கொள்ளப்படும் உதவுகை, சுய வேலை வாய்ப்பிற்காக மக்களை நெறிப்படுத்துதல் மற்றும் கிராமிய உற்பத்தியினை மேம்படுத்துதல் என்பன மிகவும் முக்கியத்துவமானவையாகும். இத்தகைய நோக்கங்களினை அடையும் பொருட்டு, கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் இனங் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு பயிற்செய்கை நோக்கத்திற்காக நீர் இறைக்கும் இயந்திரங்கள், விவசாயத்திற்காக புல் வெட்டும் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறிய தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் உபகரணம் என்பவற்றினை வழங்குவதற்கும் இக்கருத்திட்டத்தினூடாக உதவியளிக்கப்பட்டது. கால்நடை மேம்பாட்டினூடாக கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்துவது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க, கறவை மாடுகள் மற்றும் கோழிக்குஞ்சுகளினை வழங்குவதிலும் மாட்டுக் கொட்டில்களினை அமைப்பதிலும் உதவியளிக்கப்பட்டது.

இக்கருத்திட்டமானது, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு, மாத்தளை, மொனராகலை, களுத்துறை, காலி, புத்தளம், இரத்தினபுரி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது. பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களினூடாக அடையாளங் காணப்பட்ட முன்மொழிவுகளுக்கான நிதி ஏற்பாடுகள் உரிய மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிராமிய வறுமையினைக் குறைத்தல், கிராமிய தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுதல், வருமானத்தினைப் பெருக்குதல் மற்றும் சுய தொழில்களுக்காக மக்களை நெறிப்படுத்துதல் என்பவற்றினூடாக சாதாகமான பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை முறை என்பவற்றினைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10.3 விசேட பொருளாதார மத்திய நிலையங்கள்

விவசாய விற்பனை அபிவிருத்தி மூலோபாயமாக கிராமப் பகுதிகளில் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக வசதிகளை வழங்கும் நோக்கில் 1998 ஆண்டு முதல் அரச வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டைக் கொண்டு விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அது வரை கிராமிய கைத்தொழில் சுய தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலைய விடயப் பொறுப்பு 2007 ஆம் ஆண்டில் வர்த்தக, விற்பனை மேம்பாடு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் கீழும் 2010 ஆம் ஆண்டில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழும் 2015 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை உணவு பாதுகாப்பு அமைச்சின கீழும் இயங்கிய இவ் விசேட பொருளாதார நிலைய வலையமைப்பு 2015 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு 2018 டிசெம்பர் மாதம் முதல் இவ் அமைச்சின் விடயப்பரப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்களினதும் ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்துகை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை 15 ஆகிய அதேசமயம் வவுனியா மற்றும் மட்டக்களப்பு பொருளாதார மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மூன்று வகைப்படும்.

- விவசாய உற்பத்திப் பிரதேசங்களை கேந்திரமாகக் கொண்ட மொத்த விற்பனை நிலையங்கள்
- விவசாய உற்பத்தி மற்றும் அத்தியவசிய உணவுப் பொருட்களை மொத்தமாக/ சில்லறையாக விநியோகம் செய்யும் நிலையங்கள்
- நகர்ப்பகுதிகளை கேந்திரமாகக் கொண்ட சில்லறை விற்பனை நிலையங்கள்

அனைத்து விசேட பொருளாதார நிலையங்களும் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுவதுடன் ஒவ்வொரு நிலையமும் மாவட்ட செயலாளரினால் தலைமை வகிக்கப்படும் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் குழுவினால் நிருவகிக்கப்படும் அதேவேளையில் உரிய பிரதேச செயலாளர் செயலாளராகவும் தொழிற்படுகின்றார். இந்த முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் குழுவானதுனது வர்த்தக சங்கங்கள், விவசாய அமைப்புகள் மற்றும் விசேட பொருளாதார நிலையங்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற அரச நிறுவனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளினைக் கொண்டுள்ளது. இத்தகைய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் குழுவின் தாபகராக அமைச்சின் செயலாளர் விளங்குவதுடன் அனைத்து விசேட பொருளாதார நிலையங்களும் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நம்பிக்கை உரித்துறுதி மூலம் தாபிக்கப்பட்டுள்ளன.

### *விசேட பொருளாதார நிலையங்களின் அமைவிடங்கள்*

| மாகாணம் | உற்பத்தி செய்யப்படும் பிதேசத்திலுள்ள நிலையங்கள் | உற்பத்தி செய்யும் பிரதேசத்திலுள்ள விநியோக நிலையங்கள் (மொத்த/ சில்லறை) | நகர எல்லைக்குள் சில்லறை விநியோகத்தினை மேற்கொள்ளும் நிலையங்கள் | திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையங்கள் |
|---|---|---|---|---|
| மேல் | | வெலிசறை<br>மீகொட<br>வெயாங்கொடை<br>இரத்மலானை | நாரஹென்பிட்டி<br>பிலியந்தலை | |
| மத்திய | நுவரெலியா<br>தம்புள்ள<br>குருந்துவத்தை<br>கந்தஹந்திய | | | |
| ஊவா | கெப்பெட்டிப்பல | | | |
| வட மத்தி | தம்புத்தேகம | | | |
| சப்பிரகமுவ | எம்பிலிப்பிட்டிய | | | |
| கிழக்கு | அம்பாறை | | | மட்டக்களப்பு |
| வடக்கு | கிளிநொச்சி | | | வவுனியா |

### *விசேட பொருளாதார நிலையங்களின் விற்பனை நிலையங்கள்*

| விசேட பொருளாதார நிலையம் | தாபித்த திகதி | விற்பனை நிலயங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | கடைகள் | களஞ்சியங்கள் |
| தம்புள்ள | 1999.04.01 | 157 | |
| நுவரெலியா | 2006.04.08 | 138 | |
| கெப்பெட்டிப்பொல | 2001.08.12 | 71 | |
| தம்புத்தேகம | 2005.09.13 | 59 | |
| எம்பிலிப்பிட்டிய | 2003.02.25 | 46 | |
| மீகொடை | 2003.02.07 | 105 | |
| வெலிசறை | 2003.10.07 | 133 | |
| வெயாங்கொடை | 2007.08.16 | 71 | 06 |
| நாரஹென்பிட்டி | 2008.12.14 | 196 | 10 |
| இரத்மலானை | 2009.03.28 | 128 | |
| பிலியந்தலை | 2010.03.24 | 58 | |
| கந்தஹந்திய | 2006.01.27 | 25 | |
| குருந்துவத்தை | 2008.02.17 | 14 | |
| கிளிநொச்சி | 2017.10.14 | 40 | |
| அம்பாறை | 2017.12.02 | 24 | |
| வவுனியா | திறப்பதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது | 50 | |
| மட்டக்களப்பு | | 50 | |

### 10.3.2 இவ் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்க மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

#### 10.3.2.1 . விசேட பொருளாதார நிலையங்களைத் தாபித்தல்

- **வவுனியா விசேட பொருளாதார நிலையம்**

வவுனியா விசேட பொருளாதார நிலையமானது வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் நிருமாணிக்கப்பட்டு வருகின்றது. திரட்டு நிதியத்தினால் அளிக்கப்பட்ட ரூபா.200 மில்லியன் செலவில் நிருமாணிக்கப்பட்டு வரும்இந்த நிலையத்தில் 180 சதுர அடி பரப்பளவினைக் கொண்ட 50 விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டு வருகின்றன.
இந்த பொருளாதார நிலையத்தின் நிருமாணப் பணிகள் பொறியியல் நடவடிக்கைகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், தற்போது நிருமாணப் பணிகள் நிறைவு பெறும் நிலையிலுள்ளமையால் கூடிய விரைவில் இதனை திறந்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மட்டக்களப்பு விசேட பொருளாதார நிலையம்**

மட்டக்களப்பு மாவட்டதின் மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவில் களுதாவளை கிராமசேவகர் பிரிவில் நிருமாணிக்கப்பட்டுள்ள இந்தப் பொருளாதார நிலையத்திற்கென திரட்டு நிதியத்திலிருந்து ரூபா.300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார நிலையமானது ஒவ்வொன்றும் 180 சதுர அடி பரப்பளவினைக் கொண்ட 50 விற்பனை நிலையங்களினைக் கொண்டதாக தாபிக்கப்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்தப் பொருளாதார நிலையத்தினைத் தாபிப்பதற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017.07.22 ஆம் திகதியன்று இதறடகான நிருமாணப் பணியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கட்டிடத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் பொறியியல் நடவடிக்கைகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிருமாணப் பணிகள் நிறைவடைந்ததும் இந்த நிலையத்தினைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்க எடுக்கப்படும்.

### 10.3.3. விசேட பொருளாதார நிலையங்களினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள்

பொருளாதார நிலையங்களினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா.28.17 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018.12.31ஆம் திகதியிலுள்ளவாறான முன்னெற்றம் பின்வருமாறு.

| நவீனமயப்படுத்தும் செயற்பாடு | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு (ரூ.மி) | பௌதீகசார் முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) |
|---|---|---|---|
| மீகொடை விசேட பொருளாதார நிலையம் | | | |
| 'R' விற்னை நிலையத்திற்கான கூரை நிருமாணம் | 13.574 | நிருமாண நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. | 13.574- |
| வெலிசறை விசேட பொருளாதார நிலையம் | | | |
| கட்டிட இல.1 இற்கான கூரை நிருமாணம் | 7.053 | நிருமாண நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. | 5.679 |
| எம்பிலிப்பிட்டிய விசேட பொருளாதார நிலையம் | | | |
| திறந்த மண்டபத்திற்கு பாதுகாப்பு வலையினைப் பொருத்துதல் | .0.759 | நிருமாண நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. | 0.946 |
| பொருளாதார நிலையத்திற்கு நீர் வழங்கலினைப் பெற்றுக் கொள்ளுதல் | 0.128 | | |
| பொருளாதார நிலையத்திற்க ஒலி வாங்கியினை நிறுவுதல் | 0.152 | | |

## 10.3.4 2018 இல் விசேட பொருளாதார நிலையங்களின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- **விசேட பொருளாதார நிலையங்களின் நம்பிக்கை நிதியங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்**

| விசேட பொருளாதார நிலையம் | அபிவிருத்தி நடவடிக்கைகள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ.மி) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| தம்புத்தேகம | வாகனத் தரிப்பிடத்தை நவீனமயப்படுத்துதல் | 787,420.09 | 100 | 100 |
| | வெற்றுத் தரைகளுக்கு கற்கள் பதித்தல் | 698,782.12 | 100 | 100 |
| | குப்பைகள் கொட்டப்படும் ஒருகலயாய காணியைச் சுற்றி வயரினால் பாதுகாப்பு வேலி அமைத்தலும் கேற் நிருமாணித்தலும். | 979,972.93 | 100 | 100 |
| | நடைபாதைக்குப் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 1,389,954.93 | 100 | 100 |
| | பின்புறம் கேற் ஒன்று அமைத்தல் | 217,478.36 | 100 | 100 |
| | சைக்கிள்,மோட்டார் சைக்கிள் தரிபிடங்களுக்கும்கட்டிடத்னைச் சூழவும் கற்கள் பதித்தல் | 399,623.41 | 100 | 100 |
| | பின்புறம் கழிவு நீர் வாய்க்கால் நிருமாணித்தல் | 878,547.74 | 100 | 100 |
| | அலுவலகத்தினை நவீனமயப்படுத்துதல் | 61,248.96 | 100 | 100 |
| | இளைப்பாறும் அறையினை விடுமுறை கழிப்பிடமாக மாற்றியமைத்தல். | 826,435.40 | 100 | 100 |
| | மாநாட்டு மண்டபத்தினை திருத்தியமைத்தல் | 1,253,706.71 | 100 | 100 |
| | புதிய சிற்றுண்டிச்சாலையினை நவீனமயப்படுத்துதல் | 623,432.83 | 100 | 90 |
| | நிலையத்தின் வலது புறமாக கழிவு நீர் வாய்க்காலினை அமைத்தல் | 1,914,124.68 | 100 | 90 |
| | களஞ்சிய அறையினை நிருமாணித்தல் | 925,252.14 | 100 | 100 |
| | பின்புறக் கதவுக்கு மதகினை நிருமாணித்தல் | 331,328.82 | 100 | 100 |
| | உள்ளக பகுதிப்பிரிப்புக்களினை மேற்கொள்ளுதல் | 1,287,000.00 | 100 | 90 |

| விசேட பொருளாதார நிலையம் | அபிவிருத்தி நடவடிக்கைகள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ.மி) | பௌதீகசார் முன்னேற்றம் (%) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| கெப்பெட்டிப்பொல | வாகனத் தரிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள தரைப்பகுதிக்கு தார் இடுதல் | 7,685,587.94 | 100 | 100 |
| | மாநாட்டு மண்டபத்திற்கான கழிவறை நிருமாணம் | 789,708.05 | 100 | 100 |
| | CCTV கமெரா முறைமையினை நிறுவுதல் | 2,190,000.00 | 100 | 100 |
| நாரஹேன்பிட்டி | "சமனல உயன" தொடர்பான பாதுகாப்பு சுவர் நிருமாணம் | 726,766.65 | 100 | 100 |
| | புடவைத் தொகுதிக்கு உள் கூரை நிருமாணம் | 2,828,147.33 | 100 | 100 |
| | மரக்கறி தொகுதிக்கு மின் விசிறிகளைப் பொருத்துதல் | 2,235,524.56 | 100 | 100 |
| | H வரிசையினை திருத்தியமைத்தல் | 1,033,978.49 | 100 | 100 |
| | R வரிசையினை திருத்தியமைத்தல் | 1,267,060.87 | 100 | 100 |
| இரத்மலானை | குப்பைத் தொட்டி நிருமாணம் | 265,345.11 | 100 | 100 |
| | வெளிச் சுவரினைத் திருத்தியமைத்தல் | 181,304.10 | 100 | 100 |
| தம்புள்ளை | சிற்றுண்டிச்சாலைக்கு முன்பாக உள்ள காணியினை மீளமைத்தல், கழிவு நீர் வாய்க்காலுக்கு சீமெந்து துண்டுகளை இடுதல் | 1,135,929.00 | 10 | - |
| | வாகனத் தரிப்பிடத்தில் மின்சார சீராக்கல் முறைமையினை பொருத்துதல் | 759,000.00 | 10 | - |
| | கூரையில் மின்சார சீராக்கல் முறைமையினை அமைத்தல் | 5,473,500.00 | 10 | - |
| | கழிவறை வடிகாலமைப்புக்கு புதிய மோட்டர்களைப் பொருத்துதல் | 3,633,020.00 | 10 | - |
| பிலியந்தலை | கண்ணாடி இழையினாலான மின்மாணி பாதுகாப்புப் பெட்டியனைப் பொருத்துதல் | 334,310.00 | 100 | 100 |
| நுவரெலியா | உள்ளக வழிகளுக்கு கார்பெட் இடுதல் | 5,188,072.25 | 10 | - |
| | அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 255,150 | 100 | 100 |
| | கணனி மென்பொருள் விருத்தி | 350,000.00 | 50 | - |
| | தங்கு விடுதியினை நவீனமயப்படுத்துதல் | 600,000.00 | 100 | 25 |
| | பொதுவான மின் தேவைக்காக மின்பிறப்பாக்கி கொள்வனவு | 2,000,000.00 | 5 | - |
| | நீர் நிரப்பும் நிலையத்திற்கு உபகரணத்தினைப் பொருத்துதல் | 148,750.00 | 100 | 100 |
| வெலிசறை | கட்டிடம் 1 மற்றும் 2 இற்குமிடையில் சூ கட்டர் நிருமாணம் | 588,055.33 | 100 | 100 |
| | குப்பைத் தளத்தினை விரிவாக்குதல் | 545,047.27 | 100 | 100 |
| | எல்லைப்புறச் சுவரினை நிருமாணித்தல் | 429,420.48 | 100 | 100 |
| எம்பிலிப்பிட்டிய | நிலையத்தின் பிரதான இரண்டு கேற்றுக்களினை புதுப்பித்தல் | 138,240.00 | 100 | 100 |

### 10.3.5 விசேட பொருளாதார நிலையத்தின் நிதிசார் முன்னேற்றம்

| *பொருளாதார நிலையம்* | *மொத்த வருமானம் (ரூ.மி.)* | *மொத்த செலவினம் (ரூ.மி.)* |
|---|---|---|
| *தம்புள்ளை* | *64.08* | *53.53* |
| *கெப்பட்டிபொல* | *25.84* | *14.87* |
| *மீகொடை* | *10.51* | *10.82* |
| *எம்பிலிப்பிட்டிய* | *3.39* | *3.16* |
| *வெலிசறை* | *16.83* | *12.16* |
| *தம்புத்தேகம* | *28.89* | *11.58* |
| *கந்தஹந்திய* | *0.008* | *0.12* |
| *நுவரெலியா* | *13.50* | *8.51* |
| *வெயாங்கொடை* | *8.46* | *6.89* |
| *குருந்துவத்தை* | *1.30* | *0.85* |
| *நாரஹென்பிட்டி* | *59.98* | *44.94* |
| *இரத்மலானை* | *16.50* | *9.20* |
| *பிலியந்தலை* | *2.56* | *4.57* |
| *அம்பாறை* | *0.15* | *0.07* |
| *கிளிநொச்சி* | *0.39* | *0.43* |